# தூதன்

தூதன்-28 செப்டம்பர் - 2019 தூது-8

பிள்ளையின் கையைப்பிடித்து: தலீத்தாகூமி என்றார்; அதற்கு
சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம். மாற்கு 5:41




தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 10 |
| செயலர் மடல் | 12 |
| Harvest Festival Food Sales | 14 |
| எந்தச் செலவு வீண் செலவு? | 15 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 17 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| தெரிந்துகொள்வோம் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| Health Tips | 24 |
| Children's Corner | 26 |
| ஆராதனை பாடல்கள் | 29 |
| Birthday Celebrants | 30 |
| Wedding Anniversary | 33 |
| A day in the Holy Temple - Part 8 | 35 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

உன் செய்கைக்குத்தக்க பலனைக்
கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. ரூத் 2:12
May the Lord repay you for what you have done. Ruth 2:12

ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மகிமை நிறைந்த திருப்பெயரில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

கடுமையான கோடை வெப்பத்தின் கொடுமையில் இருந்து சற்றே விடுபட்டவர்களாக, விடுமுறை நாட்களை தாயகத்திலும், பிற நாடுகளிலும் மகிழ்வுடன் களித்தவர்களாக, இந்த ஒன்பதாம் மாதத்தில் கடந்து வர கர்த்தர் பாராட்டின அவரது அளவற்ற கிருபைக்காக நாம் ஆண்டவருக்கு நன்றிகளைச் செலுத்திடுவோம்.

இம்மாதத்திற்கான வாக்குத்தத்த செய்தியை ரூத்தின் புத்தகம் 2:12 திருவசனத்தின் அடிப்படையில் நாம் கற்றுக்கொள்வோம்.

ரூத் ஒரு மோவாபிய பெண். அவரது கணவர் போவாஸ். அவரது மாமனார் எலிமலேக்கு, மாமியார் நகோமி. தன்னுடைய கணவர் மற்றும் தன் இரண்டு பிள்ளைகளும் இறந்தபின் நகோமி தனித்து விடப்பட்ட சூழலில் தன் இரண்டு மருமக்களாகிய ஓர்பாள் மற்றும் ரூத்தை அவர்களது தாய்வீட்டிற்கு திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறாள். ஓர்பாள் தன் மாமியாரின் ஆலோசனைப்படி தன் தாய்வீட்டிற்குச் சென்றுவிட, ரூத் மாத்திரம் விடாப்பிடியாக தன் மாமியாரான நகோமியுடன் பெத்லகேமுக்குத் திரும்புகிறாள்.

பெத்லகேமில், ரூத்தின் வாழ்வையும், பின்னணியத்தையும், அவள் தன் மாமியாரான நகோமிக்குப் பாராட்டின தயவையும் கேட்டு, கண்டு, உணர்ந்த போவாசின் சாட்சியின் வாக்குதான் “உன் செய்கைக்குத் தக்க பலனை கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக.” (ரூத் 2:12)

இந்த சாட்சியின் அடிப்படையில் சில அனுபவ உண்மைகளை நாம் கற்றுக்கொள்வோம்.

**ரூத்தின் அன்பின் செயல் (Loveable act of Ruth):**

ஒரே குடும்பத்தில் மூன்று கைம்பெண்கள் வாழவேண்டிய நிர்பந்தமான சூழலில், யார் யாருக்கு ஆதரவு கூறுவது என்ற அமைதியற்ற சூழலில் தன் மாமியாரை, தன்னைப் பெற்ற தாயைப்போல் பார்த்து அன்பு காட்டி அரவணைத்தார். சொத்துக்களும், செல்வங்களும் கொடுக்க இயலாத மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் தன் அன்பின் நற்செயல்களினால் வெளிப்படுத்திக்கொண்டே இருந்தார் ரூத்.

எதிர்காலத்தில் தன் செயல்கள் நினைவு கூறப்படும் என்றோ அல்லது பிறருடைய பாராட்டுகளைப் பெறவேண்டும் என்றோ செயல்பட்ட அன்பு அல்ல, மாறாக அது ரூத்தின் இயல்பான குணநலனாகவே திருமறை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது.

ரூத் வெளிப்படுத்தும் மனநலம் சார்ந்த செயல் (Psychological Act of Ruth):
கணவனை இழந்து, பெற்ற பிள்ளைகள் இருவரையும் இழந்து அந்நிய தேசத்தில் வறுமையின் பிடியில் வாழத் தள்ளப்பட்ட சூழலில், இனி என்ன செய்யப்போகிறோம் என்ற தெளிவற்ற நிலையில் இருந்த நகோமிக்கு, நான் உங்களுடனே இருக்கிறேன், உங்களுடன்தான் இருப்பேன் என்ற ரூத்தின் பிடிவாதமான அணுகுமுறை ஒரு மனநலம் சார்ந்த சிகிச்சையாகவே நாம் காணவேண்டும் (Pschological Therapy). “நீர் போகுமிடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன். உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன்” எனக்கூறும் ரூத்தின் உரையாடல், நகோமியின் வாழ்வில் காணப்பட்ட வெறுமையை, தனிமையை, கைவிடப்பட்ட நிலைமையை போக்கும் மனநலம் சார்ந்த செயலாக வெளிப்படுகிறது.

ரூத் வெளிப்படுத்தும் ஆன்மீகம் சார்ந்த செயல் (Spiritual Act of Ruth):
மோவாபியப் பெண்ணான ரூத், பிறந்தது முதல் மோவாபிய சமய, பண்பாட்டு, கலாச்சார பின்னணியத்திலே வளர்க்கப்பட்டவர். திருமண வாழ்விற்குப் பிறகே யூத குடும்ப பாரம்பரியத்தைக் குறித்து அறிந்து கொள்ளத் துவங்குகிறார். தன் குடும்ப உறவுகளின் இழப்புக்குப் பின்னர் ரூத்தின் சமய வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்படுகின்றது. இதுவரை தான் வழிபட்ட மோவாபியக் கடவுள் மற்றும் சமயம் சார்ந்த அனைத்து நம்பிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு, இஸ்ராயேலரின் முழுமுதற் கடவுளான “யெகோவை” - தன் சொந்த தெய்வமாய் முழுமனதுடன் ஏற்றுக்கொண்ட ரூத்தின் செயல்பாடு, அவரது சமயம் சார்ந்த தன்மை மாற்றத்தை (Transformation in Spirituality) வெளிப்படுத்துகிறது.

இதன் தொடர்விளைவாகவே, போவாஸ், அவரது பண்பு நலன்களை உயர்த்திப் பிடித்து, “உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக.” என்று பாராட்டுகிறார்.

நம்முடைய வாழ்விலும், நமது இன்றைய செயல்கள் நாளைய வரலாறுகளாகவும், சாதனைகளாகவும், சான்றுகளாகவும் மாற்றம் பெற்றிட கடவுளின் திருக்கரத்தில் நம்மை அர்ப்பணித்திடுவோம்.
ஆண்டவரின் அருளாசியுடன்

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# ஆயரம்மா மடல்

எனக்கு அருமையான துபாய் தமிழ் திருச்சபை மக்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் கண்மணி போல காத்த தேவன் இனியும் நம்மைக் காத்து வழிநடத்த வல்லவராய் இருக்கிறார்.

இந்த நாளிலே 2 விதமான சிறுபிள்ளைகளின் செயல்களை நாம் ஒப்பிட்டு பார்ப்போம். முதலாவது அரண்மனையில் இருக்கும் பெண் பிள்ளையைக் குறித்து பார்ப்போம். மாற்கு 6:21-29 இதில் ஏரோதின் பிறந்த நாளிலே, ஏரோதியாளின் மகள் அந்த விருந்திலே நடனம் ஆடி எல்லோரையும் மகிழ்வித்தாள். அதைக்கண்டு மனமகிழ்ச்சியிலே ராஜா சிறுபெண்ணை அழைத்து, உனக்கு என்ன வேண்டும் கேள். இந்த இராஜ்ஜியத்தின் பாதியானாலும் நான் உனக்குத் தருகிறேன் என்று ராஜா கூறினதும் அல்லாமல், ஆணையிட்டு வேறு கொடுத்துள்ளார். உடனே அந்த பெண் தன் தாயாரிடம் சென்று கேட்கிறாள். அவள் தாயோ, இந்த தருணத்திற்கென்றே காத்திருந்தது போல "யோவானின் தலையைக் கேள்" என்று தன் சிறு மகளுக்குச் சொல்லித் தருகிறாள். அந்த சிறு பெண்ணும் அதை ராஜாவிடம் கேட்கிறாள். ராஜாவோ வேறு வழியில்லாமல் அவளுக்குத் தருகிறார்.

1. ஏரோதியாளின் தவறான வாழ்க்கையை யோவான் சுட்டிக் காட்டினதின் விளைவு
2. ஏரோதியாளின் தீமையான எண்ணத்தின் விளைவு
3. தன் சொந்த குமாரத்தியை பகடைக்காயாய் பயன்படுத்தி யோவானைப் பழிவாங்கினார்.

இரண்டாவதாக அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில் நாம் பார்க்கும் சிறு பெண்ணின் பெயர் ரோதை. "ரோதை" என்ற பெயருக்கு Rose என்று பொருள். இவள் மாற்கு என்கிற யோவானின் தாயார் வீட்டில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தபோது, பேதுரு வந்து கதவைத் தட்டுகிறார். இந்த ரோதை என்ற பெண் கதவருகே வந்து, யார் வந்திருக்கிறார்கள் என்று ஒட்டு கேட்கிறாள். சத்தம் பேதுருவின் சத்தம் என அறிந்து, ஜெபித்துக்கொண்டு இருப்பவர்களிடம் பேதுரு வந்திருக்கிறார் என்று கூறுகிறாள். ஆனால் யாரும் அவளுடைய பேச்சை நம்பவில்லை. "நீ பிதற்றுகிறாய்" என்று அவளை அதட்டுகின்றனர். ஆனால் அவளோ, இல்லை பேதுருதான் வந்திருக்கிறார் என்று உறுதியாய் சொன்னாள்.

பின்னும் அவர்கள் அவளை நம்பாமல் அது அவரல்ல, அவருடைய தூதனாய் இருக்கலாம் என்று அவளை அமர்த்தினர். ஆனால் அவள் விடவே இல்லை. வந்திருப்பது பேதுருதான் என்று உறுதியாய் கூறினதும் அல்லாமல், அவர்களை அழைத்து வந்து கதவைத் திறந்தபோது பேதுரு நின்றுகொண்டு இருப்பதை பார்த்து பிரமித்தார்கள்.

1. பணிப்பெண்ணாய் இருந்தும் தான் கண்டதை தைரியமாய் சொன்னாள்.
2. அவள் ஆண்டவரை நம்பி இருந்ததால், பேதுருவையும், அவன் சத்தத்தையும் அறிந்திருந்தாள்.
3. இரவு நேரமாய் இருந்தபோதும், கண் விழித்து ஜெபத்தில் தரித்திருந்தாள்.
4. சோர்ந்த மக்களுக்கு தன் மூலமாய் ஒரு நற்செய்தி சொல்லுகிறோம் என்று அவள் மிகவும் வாஞ்சையாய் இருந்தாள்.
5. தான் சொல்லவந்த கருத்தை நம்பிக்கையோடும், உறுதியாயும் சொன்னாள்.

இந்த இரண்டு பெண்களுமே தங்களிடம் உள்ள தாலந்தை வெளிப்படுத்தினர். ஆனால் ஒரு பெண் நல்லமுறையிலும், மற்றவள் பாவத்திலும் தன்னுடைய தாலந்துகளை வெளிப்படுத்தினார்கள்.

இருவரும் சிறிய வயதை உடையவர்கள். ஆனால் ஒரு பெண் இளவரசி, ஒருத்தி பணிப்பெண்.

ஒருபிள்ளை தன் தாயின் பேச்சைக் கேட்டு தீமையான வழியில் நடந்தாள். ஆனால் ரோதையோ கடவுளுக்கு பயந்து அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கினாள்.

எனக்கு அருமையான மக்களே, இந்த சிறுபிள்ளைகளைப்போலத்தான் நாமும் நன்மை, தீமை அறிந்து நாம் கடவுளுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்கிறோம். அவற்றை நம்மால் மாற்றிக் கொள்ளவே முடிவதில்லை. ரோதையைப் போல் கடவுளிடம் உறுதியாய் நாம் இருக்கும்போதுதான் தீமைகளை விட்டுவிட நம்மால் முடியும். நாம் இந்த உலகத்தில் வாழ்வது ஒருமுறை, ஒரு வாழ்வு. அதை நம் ஆண்டவருக்கு பிரியமான வாழ்க்கையாக அமைத்துக்கொள்வோமா!

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் ஆயரம்மா
திருமதி.மேரி உமா விக்டர்.

# உதவி போதகர் மடல்

இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அனைவருக்கும் செப்டம்பர் மாத வாழ்த்துக்களை அன்போடு தெரிவிக்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் போஷித்து, போதித்து, வழிநடத்திய தேவாதி தேவனை நன்றியோடு துதிப்போம்.

## போதிக்கும் மிருகங்கள், பறவைகள்

"இப்போதும் நீ மிருகங்களைக் கேட்டுப்பார், அவைகள் உனக்குப் போதிக்கும்: ஆகாயத்துப் பறவைகளைக் கேள், அவைகள் உனக்கு அறிவிக்கும்" யோபு 12:7

Ask the animals, and they will teach you, or the birds in the sky, and they will tell you. Job 12:7

தேவன் மிருகங்களையும், பறவைகளையும் நம்மைப்போலவே நேசிக்கிறார் என்பதை வேதாகமத்திலிருந்து அறிந்துகொள்ளலாம். சங்கீதம் 145:9-ல் "கர்த்தருடைய இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது" என்று வாசிக்கின்றோம். பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள மிருகங்களும், பறவைகளும் நமக்கு அநேக காரியங்களைக் கற்றுத் தருகின்றன. அவற்றில் ஒன்றை இம்மாதம் தியானிக்கலாம்.

### மான் - Deer

மான் பாலூட்டி வகையில் இரட்டைக் குளம்பு வரிசையைச் சார்ந்த ஓர் அழகான விலங்காகும். தாவர உண்ணியான இது ஆடு, மாடு போல அசை போடும் விலங்கு. மான்களில் புள்ளி மான், சருகு மான், சம்பார் மான், கவரி மான் என்று 26 வகை மான்கள் உள்ளன. ஆண் மானுக்கு அழகிய கொம்புகள் இருப்பதால் அவை "கலை" என்றும், பெண் மான் சிறிய கொம்போ அல்லது கொம்பு இல்லாமலோ இருப்பதால் அவை "பிணை" என்றும் அழைக்கப் படுகிறது. மானின் கொம்புகள் அவற்றின் எலும்புகளின் நீட்சியே. தலையின் எலும்புகள் வெளிய நீண்டு வளரும் ஒரே விலங்கு மான்தான். மான் கொம்புகள் ஆண்டுதோறும் விழுந்து புதிதாக முளைக்கும். பொதுவாக மான் வேகமாக ஓடக்கூடியது. இப்படிப்பட்ட மான் பற்றி பரிசுத்த வேதாகமம் கூறுவது என்ன?

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது". சங்கீதம் 42:1 - As the deer pants for streams of water, so my soul pants for you, my God. Psalm 42:1

மானானது தன் தண்ணீர் தேவைக்காக பல மைல் தூரம் பயணிக்கும். எனவேதான் பல வேளைகளில் ஒருசில மான்கள் காட்டை விட்டு ஊருக்குள் வந்துவிடும் சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். மொத்தத்தில்

மானுக்கு அதன் உணவோடு தண்ணீர் மிகமிக அவசியம். இதுபோலத்தான் நல்ல கிறிஸ்தவர்களாக நமக்கு ஆண்டவருடைய பிரசன்னம் மிக மிக அவசியமானது. எனவேதான் சங்கீதக்காரர் மானைப்போல என் ஆத்துமா தேவனை வாஞ்சிக்கிறது எனக் கூறுகின்றார். தேவனை வாஞ்சித்தல் என்பது அவரது பிரசன்னத்தைத் தேடுவதாகும். தேவ பிரசன்னம் நம்மோடில்லாமல் நம்மால் இந்த உலகத்தில் உண்மையாய், உத்தமமாய் வாழ இயலாது. பாதுகாப்பாயும் வாழ இயலாது. எனவே நாமும் நமது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் மானைப்போல தேவபிரசன்னத்தை நாடித் தேடுவோம்.

வெளிமான் வேட்டைக்காரன் கைக்குத் தப்புவதுபோல, நீ உன்னைத் தப்புவித்துக்கொள். நீதி.6:5 - Free yourself, like a deer from the hand of the hunter; ... Proverbs 6:5

மானானது தன்னை வேட்டையாட வரும் சிங்கம், புலி போன்ற மிருகங்களுக்குத் தப்பிப் பிழைக்கும்படி வெகு வேகமாக ஓடும். அதனுடைய வேகத்தால் மாத்திரமே அதனால் தப்பிப் பிழைக்க முடியும். அதுபோல நாமும் நம்முடைய எதிராளியான சாத்தானின் வஞ்சகங்களுக்குத் தப்பிப் பிழைக்க வேண்டுமெனில் வெகு சுறுசுறுப்பாய், எப்போதும் வேத வசனங்களைத் தியானித்து அவற்றை நம் மனதிலே வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் சாத்தானின் கண்ணிகளுக்குத் தப்பமுடியும். “துன்மார்க்கர் எனக்குக் கண்ணி வைக்கிறார்கள், ஆனாலும் நான் உம்முடைய கட்டளைகளை விட்டு வழி தவறேன்” (சங்கீதம் 119:110) என்று சங்கீதக்காரர் கூறுகின்றார்.

அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி.... சங்கீதம் 18:33 - He makes my feet like deer's feet, and sets me upon my high places. Psalms 18:33

மானுக்கு அதன் கால்கள்தான் பலம். அதன் கால்களே அதனை வேகமாய் ஓடச் செய்கின்றன. மானைப்போல நாம் தேவ பிரசன்னத்தையும், தேவ வார்த்தைகளையம் நாடித் தேடுவோமாகில், தேவன் நம்மை ஆசீர்வதித்து நம்மை பலப்படுத்துகின்றார். அந்த பலம் மானின் கால்கள் போன்று பலமாயிருக்கும். பார்ப்பதற்கு மெலிதாக இருந்தாலும் மானின் கால் எவ்வளவு வலிமையானதோ, அதுபோல நாமும் பார்ப்பதற்கு சாதாரணமானவர்களாக இருந்தாலும் தேவ ஆவியானவரால் பலப்படுத்துவோம்.

கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு.ஜான் வெஸ்லி
உதவி ஆயர் - ஃபுஜைரா திருச்சபை.

# உதவி ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும் நம்மைக் கண்மணிபோலப் பாதுகாத்து நடத்தி வந்த இராஜாதி ராஜன் இயேசுதாமே, இந்தப் புதிய மாதத்திலும் நம்மைப் பாதுகாத்து ஆசீர்வதித்து நடத்துவாராக.

வேத தியானம்

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். சங்கீதம் 1:2

குரு ஒருவர் தன் சீடர்களோடு வாழ்ந்து வந்தார். ஒருமுறை அந்த குரு தன் சீடர்களை அழைத்து, அவர்களுடைய ஆசிரம வளாகத்தில் கிணறு ஒன்றை தோண்டச் சொன்னார். மறுநாள் அச்சீடர்கள் குருவிடம் வந்தபோது, குரு அவர்களிடம் கிணறு தோண்டிவிட்டீர்களா? தண்ணீர் நன்றாக வருகின்றதா? என்று கேட்டார். அதற்கு அந்த சீடர்கள், "குருவே, நாங்கள் ஒரு இடத்தில் 10அடி ஆழம் தோண்டினோம், அங்கு தண்ணீர் வரவில்லை. பின்பு மற்றொரு இடத்தில் 15 அடி ஆழம் தோண்டினோம், அங்கும் தண்ணீர் வரவில்லை. மேலும் கஷ்டப்பட்டு மற்றொரு இடத்தில் 20 அடி ஆழம் தோண்டினோம், ஆனால் அந்த இடத்திலும் தண்ணீர் வரவில்லை. நாங்கள் கஷ்டப்பட்டதெல்லாம வீணாகிவிட்டது" என்று ஏமாற்றத்தோடு பதில் கூறினார்கள். அதற்கு குரு, "அட புத்தியில்லாத சீடர்களே, நீங்கள் 3 இடத்தில் மொத்தம் 45 அடி ஆழம் தோண்டியுள்ளீர்கள். அதற்குப் பதிலாக அந்த 45 அடியையும் ஒரே இடத்தில் தோண்டியிருந்தீர்களானால் நிச்சயம் தண்ணீர் வந்திருக்குமல்லவா" என்று கடிந்து கொண்டார். அப்போதுதான அந்த சீடர்கள் தங்களின் தவறை உணர்ந்தனர்.

அன்பானவர்களே! வேதத்தை வாசிப்பது என்பது வேறு, தியானிப்பது என்பது வேறு. நல்ல கிறிஸ்தவர்களாய் ஒவ்வொருவரும் வேதாகமத்தைத் தியானிப்பது அவசியம். சரி வேதத்தைத் தியானிப்பது எப்படி? ஒரு பசுமாட்டைப் பாருங்கள். அது வேகமாகப் புற்களை மேய்கிறது. அது வேதத்தை வாசிப்பதற்கு ஒப்பாகும். பின்பு ஒரு இடத்தில் அமைதியாகப் படுத்திருந்து தான் மேய்ந்த புற்களையெல்லாம் மீண்டும் தன்னுடைய நாவில் எடுத்து அசைபோடுகிறது. அப்படி அசைபோடுவதினால் அந்த புற்கள் பசுவின் வயிற்றில் நன்றாக ஜீரணமாகி பாலாக மாறிவிடுகிறது. அப்படியே வேதவசனங்களை நாம் வாசித்த பின்பு, அதற்கென்று நேரமெடுத்து அதனை நன்றாய்த் தியானிக்கும்போது, அது நமக்கு

வல்லமையாகவும், பெலனாகவும், கர்த்தரைத் துதிக்கும் துதியாகவும் மாறிவிடும். வேதத்தைத் தியானிக்கும்போதுதான் தேவனுடைய மகிமை, மகத்துவம், பிரசன்னத்தை நம்மால் உணரமுடியும்.

வேதத்திலே ஈசாக்கை நல்ல தியான புருஷனாகப் பார்க்கிறோம். சாயங்கால வேளையிலே வீட்டைவிட்டு வெளியே போய் தியானம் பண்ணினதாக வாசிக்கிறோம் (ஆதி.24:63). ஒருவேளை வெளியிலே இயற்கையைப் பார்த்து ஆண்டவருடைய மகிமை, மகத்துவங்களைத் தியானித்து ஆண்டவரைத் துதித்திருப்பார். அதுபோல தாவீதும் தன் வாழ்விலே சிறந்த தியான புருஷனாக இருந்து அதின் வாயிலாக ஆண்டவரின் கட்டளைகளை, சாட்சிகளைத் தியானித்தார் (சங். 119:15).

நாம் எப்படி வேதத்தைத் தியானிக்கிறோம் என்பதை யோசித்துப் பார்ப்போம். ஏதோ வேதத்தை வாசிக்க வேண்டுமே என்று வேதாகமத்தைக் கையில் எடுத்து ஒன்றிரண்டு அதிகாரங்களை வாசிக்கின்றோமா? இப்படி வெறுமனே வாசிப்பதினால் நாம் நம் வாழ்வில் தேவனுக்கேற்ற கனி கொடுக்க முடியாது. நாம் கனி கொடுக்க வேண்டுமானால் வேதத்தை ஆழமாகத் தியானித்துப் பழகவேண்டும். ஒரு அதிகாரம் வாசித்தாலும் அதனை ஆழமாய்த் தியானித்து அதன் மூலம் கர்த்தர் நம்மோடு பேசும் காரியங்களை நன்றாய் உணர்ந்து அதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

பெரோயா பட்டணத்தார் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப்.17:11). எனவே நாமும் வேதத்தை ஆழமாய்த் தியானிப்போம், கனி கொடுப்போம், நற்குணசாலிகளாய் இருப்போம்.

உங்களுக்காக ஜெபிக்கும்..
திருமதி.ஏஞ்சலின் ரூபா ஜான் வெஸ்லி.

## MEMORY VERSE CONTEST - 2019

The Memory Verse Contest for the year 2019
will be conducted on 13th September 2019.
Please download the memory verses (Grade wise)
from our church website and make the children
LEARN AND BE BLESSED.

# உதவி போதகர் மடல்

இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தர் நமது வாழ்வில் அருளிய நன்மைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். செப்டம்பர் மாதத்திலும், கர்த்தர் நமது திருச்சபை வாழ்விலும், குடும்பத்திலும் அருளியிருக்கும் நன்மைகளுக்காக நன்றி சொல்லுவோம். குறிப்பாக இம்மாதம் தென்னிந்தியத் திருச்சபை (CSI) ஆரம்பித்த நாளாகிய செப்டம்பர் 27, 1947. அந்நாளை நினைவுகூர்ந்து கர்த்தருக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தருடைய வசனம் உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

திருமறைப்பாடம் : நியா. 6:1-16. தியான வசனம்: நியா. 6:12

"...பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்"
"... The Lord is with you, mighty warrior?"

வாழ்வில் துன்பங்கள், வேதனைகள், கண்ணீர், கவலைகள், பெலவீனங்கள், சோர்வுகள், பயங்கள் சூழ்ந்துள்ளன. துன்பங்களில் கர்த்தர் என்னைக் கைவிட்டுவிட்டாரே என நினைப்பதும், ஏன் துன்பம் நீங்கவில்லை எனக் கூறுவதும் உண்டு. ஆனால் கர்த்தரில் நம்பிக்கை கொள்வோர் பதறாமல் காணப்படுவர்.

நம்பிக்கையிழந்து இருந்த சீடர்களை இயேசுநாதர், உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று நிறைவாழ்வுக்கு நடத்துகிறார்.

கர்த்தர் எவ்விதம் உடனிருந்து நடத்துகிறார் என்பதனை திருமறையின் பகுதியிலிருந்து தியானிப்போம்.

1. நம்பிக்கையிழந்த சூழலில் கர்த்தர் உடனிருக்கிறார் (நியா. 6:14):
"... உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ, நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய், உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா" என்றார். "Go in the strength you have and save Israel out of midian's hand. Am I not sending you?"

கர்த்தர் இஸ்ரவேலரை மீதியானியரின் கையில் ஒப்புக் கொடுத்தார். இஸ்ரவேலர் மீதியானியருக்குப் பயந்து மலைகளில், கெபிகளில், குகைகளில் அடைக்கலம் புகுந்தனர். மீதியானியர் இஸ்ரவேலரை மிகவும் சிறுமைப்படுத்தினார்கள்.

கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்கு சமீபமாய் அதைப் போரடித்தான். கர்த்தருடைய தூதனானவர் கிதியோனிடம், “பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்” என்றார். மேலும் உன்னுடைய இதே பெலத்துடன் போ, மீதியானியரின் கையிலிருந்து இஸ்ரவேலை நீ விடுவிப்பாய் என்றார். (நியாயாதி. 6:14)

நம்பிக்கையிழந்த சூழலில் கர்த்தரின் ஆற்றல் நம்பிக்கையூட்டி ஆற்றல்படுத்தியது. துன்பங்களில் நம்முடன் இருக்கும் கர்த்தரை உணர்ந்தால் இறைபெலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 2. பயத்தின் சூழலில் கர்த்தர் உடனிருக்கிறார் (2 நாளாகமம் 20:17)

“... பயப்படாமலும், கலங்காமலும் இருங்கள், நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள், கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான்”

"Do not be afraid, do not be discouraged, Go out to face them tomorrow, and the Lord will be with you”

ஆசா மன்னரின் குமாரன் யோசபாத்தின் ஆட்சியில் சமாதானமிருந்தது. இவர் கர்த்தருக்குப் பயந்து அரசாட்சி செய்தவர். மோவாப், அம்மோன் புத்திரரும், அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷரும் தனக்கு எதிராக யுத்தத்திற்கு வருகிறார்கள் என்று அவரிடம் சொன்னபோது யோசபாத் பயந்தார் ( 2 நாளா. 20:1-3)

கர்த்தருக்குப் பயந்து செயல்பட்ட அரசன் மனிதருக்குப் பயந்துபோனார். ஆனாலும் அவர் ஜனங்களிடம் கர்த்தரைத் தேடவும், உபவாசமிருக்கவும், கர்த்தரைத் துதித்துப் பாடவும் பாடகரை ஏற்படுத்தினார். யோசபாத் பெரும் வெற்றி பெற்றார் ( 2 நாளா. 20:21,22)

பயம் நிறைந்த சூழலில், கர்த்தரைத் தேடி, துதித்துப் பாடும்போது கர்த்தர் உடனிருந்து வெற்றியடையச் செய்வதை நம் வாழ்வில் அனுபவிக்க முடியும்.

எல்லாச் சூழலிலும் நம்முடனிருந்து நம்மை நடத்தும் இம்மானுவேலராக செயல்படும் இயேசுகிறிஸ்துவிடம் நம் வாழ்வை ஒப்படைத்து வாழ்வோம்.

கர்த்தர் எப்போதும் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

# செயலர் மடல்

கர்த்தரை நம்புகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்ற வாக்குத்தத்தத்தின்படி இஸ்ரவேலின் தேவன் நம் திருச்சபையின் குடும்பங்களைக் காத்து வழி நடத்தி வருவதற்காக அவருக்கு துதி, கனம், மகிமை யாவும் உரித்தாகுக.

இவ்வருடத்தின் கோடைவிடுமுறைதனை நம் தாய்நாட்டிலும், மற்ற பிரதேசங்களிலும் சிறப்பாக அனுபவித்து, மற்றும் தாய்நாட்டில் உள்ள அனைத்து நம் இன ஜன பந்துக்களோடு நல் ஐக்கியம் கொண்டு மீண்டும் இத்தேசம் திரும்ப கர்த்தர் தந்த சமாதானம், சுகம், பெலன், ஆசீர்வாதங்களுக்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தி திருச்சபையின் அங்கத்தினர்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.

மறுபடியுமாய், அவரவர் தம் வேலைகளைத் துவங்கிச் செய்ய நம்முடைய தேவன் உங்கள் அனைவருக்கும் பெலனையும், நல் ஆரோக்கியத்தையும் ஈந்திட நம் ஆண்டவரை பிரார்த்திக்கிறேன். மீண்டுமாய், தங்கள் யாவரையும் தொடர்ந்து திருச்சபையின் அனைத்து ஐக்கியங்களிலும் சிறப்பான பங்களிப்பைத் தந்து, அனைத்து ஊழியங்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபிக்குமாறு அன்போடு வேண்டிக்கொள்ளுகிறேன்.

கடந்த ஜூலை, ஆகஸ்டு விடுமுறை மாதங்களில் இங்கேயே தம் விடுமுறையைக் கழித்த அனைத்து சிறார்களுக்கும், நமது சபையின் Summer Camp 2019 திருமதி. சாரா பாஸ்கோ அவர்களது தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டு மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. இதில் பங்குபெற்ற அனைத்து பிள்ளைகளுக்கும், அவர்களோடு இணைந்து இதற்காக ஜெபித்து உடன் ஊழியம் செய்த அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகஸ்டு 9-ம் தேதியன்று நம் தாய்நாட்டின் 73-வது சுதந்திர தினத்தை நினைவுகூர்ந்து ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இந்த மாதத்தில் மீண்டும் துவங்க இருக்கின்ற Junior Church ஊழியங்களுக்காகவும், நம்முடைய திருச்சபையின் அனைத்து பிள்ளைகளுக்காகவும் சபையார் தங்கள் தனித்த, குடும்ப ஜெபங்களில் தாங்கிக்கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் செப்டம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள Retreat, Teachers Day Special Service, பிள்ளைகளுக்கான Memory Verse Contest, Choir Friday மற்றும் CSI Day Celebration ஊழியங்களில் யாவும் சபையார் தங்களின் ஊக்கமான ஜெபம் மற்றும் பங்களிப்பை நல்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

எல்லாக் காரியங்களின் பலனை தேவன் அதினதின் காலங்களில் உங்களுக்குத் தந்தருளுவாராக.

Babu Jeyaseelan
Secretary.

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சேர்ந்த
Mrs.Pradeepa David Paul அவர்களின் தாயார்
Mrs.Anbu Malar Azhagi Shankar அவர்கள் கடந்த 01-07-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mrs.Ruby Jerryn அவர்களின் தகப்பனார்
Mr.George அவர்கள் கடந்த 11-07-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mrs.Monika Sharvin அவர்களின் தகப்பனார்
Dr.R.Asok Yesudhas அவர்கள் கடந்த 22-07-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mrs.Flower Grace Ananda அவர்களின் தகப்பனார்
Mr.Devasahayam அவர்கள் கடந்த 24-07-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mr.Manuel Jebaraj அவர்களின் தகப்பனார்
Mr.Dava Mani அவர்கள் கடந்த 02-08-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mr.Kingston Jose, Mr.Hilton Jose ஆகியோரின் தாயாரும்,
நமது சபை Treasurer Mr.S.Pushparaj அவர்களின்
சகோதரரின் துணைவியருமான
Mrs.Baby Christy Joseph அவர்கள் கடந்த 04-08-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mr.Vijay அவர்களின் தகப்பனார்
Mr.Michael Boobathi அவர்கள் கடந்த 12-08-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mrs.Thilaka Manimuthu, Mr.N.P.M.Caldwel ஆகியோரின் தாயார்
Mrs.Packiyabai Paul Natarajan அவர்கள் கடந்த 23-08-2019 அன்றும்
நமது சபையைச் சேர்ந்த
Mr.E.Bosco அவர்களின் Grandfather
Mr.Venkat அவர்கள் கடந்த 24-08-2019 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# HARVEST FESTIVAL 2019

## WEEKLY FOOD SALES

| Date | Sponsoring group |
|---|---|
| 06-09-2019 | Sharjah - B Prayercell |
| 13-09-2019 | International City Prayercell |
| 20-09-2019 | Karama - B Prayercell |
| 27-09-2019 | Karama - A Prayercell |
| 04-10-2019 | Bur Dubai Prayercell |
| 11-10-2019 | Sharjah - A Prayercell |
| 18-10-2019 | Qusais - A Prayercell |
| 25-10-2019 | Junior Church |
| 01-11-2019 | Sharjah - C Prayercell |
| 08-11-2019 | Corner Stone |
| 15-11-2019 | **Harvest Festival - Dubai** |

## திருமறைப் பாட ஒழுங்குகள் - செப்டம்பர் 2019

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-09-2019 | ஆசிரியர் தின வழிபாடு | நெகேமியா 8:1-8 | அப்போ. 18:24-28 | மத்தேயு 5:1-12 | 119: 41-48 |
| 13-09-2019 | பாடகர் குழு வழிபாடு | 1 நாளா. 15:16-25 | கொலோ. 3:15-17 | லூக்கா 2:25-32 | 100 |
| 20-09-2019 | வன்முறை சூழலில் அமைதி | 1 சாமு. 24:1-12 | ரோமர் 12:14-21 | மத்தேயு 5:16-26 | 52 |
| 27-09-2019 | தென்னிந்தியத் திருச்சபை நிறுவன நாள் | எசேக்கி. 37:15-23 | 1 கொரிந். 3:1-15 | யோவான் 17:9-21 | 28 |

# எந்தச் செலவு வீண் செலவு?

அந்தியிலே பந்தி--இயேசு
    சுமந்துவந்தார் அன்பு
வந்ததிலே முந்தி--தந்தாள்
    விசுவாசம் வீசும்வாசம்

வெள்ளைக்கல் பரணி--கொள்ளளவு
    உள்ளளவில் பரிமளம்
உள்ளத்தில் துள்ளல்--களிப்பின்
    குளிப்பில் உடைத்தெடுத்தாள்

ஊற்றிவிட்டாள் சிரசில்--தைலம்
    தலைமுடியடி தொடுகையில்
ஏற்றுவிட்டார் இயேசு--மாற்றுச்சிந்தை
    சுற்றிநின்றோர் நெஞ்சத்தில்

சீறிவிட்டார் சீடர்--சற்றே
    சினந்துகேட்டார் கேள்வி
மாறுபட்ட மதிப்பீட்டில்--மனிதர்
    "வீண்செலவு ஏன் ?" என்றார்

ஏற்றுக்கொண்ட இயேசு--"அவளை
    விட்டுவிடு" என்றார்
"ஏற்றகாலத் தேவை--நிறைவேறும்
    நற்கிரியை" என்றார்

எதுநல்லது அல்லது--எல்லோரும்
    புரிந்துகொள்வது இல்லை
அதுபொருளோ நேரமோ--கர்த்தருக்குக்
    கொடுப்பது வீணா ?

பகட்டு படாடோபம்--மட்டும்
    பலனெதுவும் தருமா ?
திகட்டும் ஆடம்பரம்--கர்த்தருக்குத்
    திருப்திகொண்டு வருமா ?

பரலோக முதலீடு--பெருக
பூலோக செலவீடு
திறமையோ திரவியமோ--நேரமோ
தருகிறது ஈடு

பூமியிலே பூச்சி--பரலோகிலோ
பாதுகாப்பு ஆச்சு
சேமநிதி வைப்பு(க்கு)--தேர்ந்த
பெட்டகமாய்ப் போச்சு

ஆத்துமாவைத் தேற்றி--தேவ
ஆசீர்வாதங் கூட்டி
காத்திரமாய் நீட்டி--பரலோக
கருணைகளை ஈட்டி

பொக்கிசத்தைச் சுற்றி--இதயம்
போய்க்கிடக்கும் பற்றி
சக்திகளைத் தேக்கி--வைப்பின்
உச்சத்திலே பாக்கி !

ஆதாரம் :
மத்தேயு 26:7,8
2 கொரிந்தியர் 12:15
மத்தேயு 6:21
சங்கீதம் 16:2,3
கவிதை எண் : 221
கவி புனைவு : மணிமுத்து.

## வாழ்த்துகிறோம்

கர்த்தருடைய கிருபையால் ஜூலை மாதம் 10-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Jaison Paul & Mrs.Grace Jenitha

கர்த்தருடைய கிருபையால் ஜூலை மாதம் 12-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Kelvin & Mrs.Abisha Greeni

கர்த்தருடைய கிருபையால் ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mrs.Andrina & Mr.Monish Daniel

இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்.
ரோமர் 12:9

மகனே கேள்...
மாயையின்
ஆதிக்கத்தில்
புலன்கள்
அனுபவிக்கும்
அற்ப சந்தோஷத்துக்கு
ஆசைப்பட்டு
அல்லல்படுவதை
விட்டுவிட்டு
இரட்சகர் இயேசுவின்
தெய்வீக பணிகளை
செய்வதில்
புலன்களை
பயன்படுத்துவதே
பக்குவநிலை...
பக்தி நிலை எனில்
இதயம் முழுதும்
உதயமாகும்
ஆன்மீக அலை
இதுவே பரம் தரும்
பரமநிலை
“இயேசுவின்
போதனையே
அன்பே பிரதானம்”
இன்று...
பரிபூரண அன்பு
பிறரிடம்
செலுத்துவதில்லை.
கருணையோ
மதிப்போ
காட்டுவதில்லை
புண்படுத்தும்
வார்த்தையால்
நண்பரும்
பகையானது
உண்டுதானே...
ஒருவரின்...
சங்கடத்தில்
சஞ்சலத்தில்
அன்பை
பொழிந்து
ஆறுதல்
தரலாம்தானே
“ஆக.. பைபிள் தரும்
அன்பு மாயமற்றதாக
இருப்பதாக என்பது
இதனால்தானே..”
அன்பை
பிறருக்கு
கொடுத்துப் பாருங்கள்
அன்பை
பிறரிடம் இருந்து
பெற்றுப் பாருங்கள்
ஆனந்தம்
அதிகம்தானே...
இயேசுவின்
தாசன் என்பவர்
நன்மைகளின்
கதவுகளை
திறந்தும்
தீமையின் கதவை
அடைத்தும்
நன்மையை
பற்றிக்கொள்வர்
இவர்களுக்கு
இயேசு...
சுப சோபன
வாழ்வு வழங்குவார்.
இயேசுவின் அடிமை
ஆகாத மனிதரின்
மனம் மாறிவிடும்
இவர்கள்
தீமையின் கதவுகளை
திறந்தும்
நன்மையின்
கதவுகளை
அடைத்தும் விடுவர்.
இவர்களிடம்...
இயேசுவின் வாசம்
வருமா..?
மகனே கேள்...
தீமையை வெறுப்பது
நியாயம்தானே...
வேத வசனங்கள்
மூலம் ஆராய்ந்து
ஜீவ சேவையே
கர்த்தர் சேவை
என்பதை
உணருங்கள்.
இயேசுவின்
பக்தரே...
வேண்டுங்கள்.
அப்பா... பிதாவே...
நான் மறக்கிலும்
என் நாவு
இயேசுவின் நாமம்
சொல்லட்டும்
இதுவே
அன்பின் நாமம்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# திருச்சபை ஜெபநாள் 01-09-2019 (முதல் ஞாயிறு)

"சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்." சங்கீதம் 84:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- விடுமுறைக்காலங்களில் கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் தந்த பாதுகாப்பு, பிரயாண ஒத்தாசைகளுக்காகவும், Summer Camp சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கரிசனைக்காகவும் அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- நடைபெற இருக்கும் இராஸ் அல் கைமா, துபாய், ஃபுஜைரா திருச்சபைகளின் ஸ்தோத்திரப் பண்டிகைகளுக்காக ஜெபிப்போம்.
- நடைபெற இருக்கும் வருடாந்திர நற்செய்திக் கூட்ட ஒழுங்குகளுக்காகவும் ஜெபிப்போம்.

"சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும், யாக்கோபின் தேவனே, செவிகொடும்." சங்கீதம் 84:8

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# தெரிந்து கொள்வோம்

## மிஷனெரிகள் பகுதி 72

### அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் - மத்தேயு 9:37

### Rev.ஹென்றி பேக்கர் (ஜுனியர்)

Rev.ஹென்றி பேக்கர் (ஜுனியர்) அவர்கள் 1819-ம் ஆண்டு ஜுன் மாதம் 14-ம் நாள் இந்தியாவில் தஞ்சாவூரில் பிறந்தார். இவரது தந்தை Rev.ஹென்றி பேக்கர் (சீனியர்) தாயார் திருமதி. அமரி டோரோதியா பேக்கர் இருவரும் குடும்பமாக தஞ்சாவூரில் ஊழியம் செய்து வந்தனர்.

ஆரம்பக் கல்வியை முடித்த ஹென்றி பேக்கர் (ஜுனியர்) உயர் கல்வி கற்பதற்காக 1839-ம் ஆண்டு இங்கிலாந்து சென்றார்.

இங்கிலாந்து நாட்டில் உள்ள C.M. கல்லூரியில் இறையியல் கல்வி கற்று போதகரானார். பின்னர் 1843-ம் ஆண்டு ரிப்பன் நகர பேராயரால் அபிஷேகம் செய்யப்பட்டார்.

1843-ம் ஆண்டு இந்தியாவுக்குத் திரும்பிய ஹென்றி பெற்றோர் மற்றும் சகோதரிகளுடன் சேர்ந்து தஞ்சாவூரில் ஊழியம் செய்தார்.

1848-ம் ஆண்டு CMS நிறுவனத்துடன் இணைந்து மத்திய திருவிதாங்கூரில் உள்ள பழங்குடி, ஆதிவாசி மக்களிடையே ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்தார். மிக அடர்ந்த காடுகளிலும், மலைகளிலும் பயணம் செய்து தன்னுடைய சுவிசேஷப்பணியை ஆரம்பித்தார். மிகக் கொடிய நோய்கள் அந்த நாட்களில் பரவி வந்தது. ஆனாலும் எதையும் பொருட்படுத்தாமல் ஊழியத்தில் கவனமாகச் செயல்பட்டார்.

1849-ம் ஆண்டு முண்டகாயம் என்னும் இடத்தில் தன்னுடைய ஊழியத்தை விரிவுபடுத்தினார். அங்கு ஒரு தேவாலயத்தையும், கல்வி அறிவை வளர்க்க பாடசாலைகளை உருவாக்கினார். கோட்டயம் மாவட்டத்தில் பல்லம், இறுமாபுரா, கைக்கா, அசாபியா, மெலுகாவ், இரும்பிரா, காசிக்கா போன்ற இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட இடங்களில் ஆலயம் உருவானது. பாடசாலைகளை உருவாக்கி அங்குள்ள பிள்ளைகளின் வாழ்வில் கல்வி வளர்ச்சியடைய பாடுபட்டார்.

ஹென்றி பேக்கர் ஜூனியர் அவர்கள் கேரளாவில் "மலை அரியா பழங்குடி கிறிஸ்தவர்களின் அப்போஸ்தலன்" என்றும், "மலைகளின் தூதர்" என்றும் அழைக்கப்படுகிறார். Rev.ஹென்றி பேக்கர் ஜூனியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வண்டிப்பெரியார் தேவாலயம் இன்று CSI கிழக்கு கேரள மறைமாவட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. நமது திருச்சபையின் அங்கத்தினர் பலரும் இந்த திருச்சபையில் அங்கத்தினராக உள்ளனர். இவர் ஆரம்பித்த அனேக ஆலயங்கள் மலை உச்சியில் நிறுவப்பட்டுள்ளதால், அவைகள் அந்தப் பகுதியின் மிகுந்த அடையாளங்களாக காணப்படுகிறது.

தஞ்சாவூரில் பிறந்து இங்கிலாந்து நாட்டில் கல்வி கற்று, கேரளா மாநிலத்தில் அனேக ஆலயங்களையும், பாடசாலைகளையும் உருவாக்கி கிறிஸ்துவின் அன்பை எடுத்துக்கூறி 35 வருடம் மிகச் சிறந்த ஊழியத்தை நிறைவேற்றி, 1878-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் நாள் சென்னையில் கோதுமை மணியானார்.

R.ஜெபர்சன்

## NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Jeffry J Adriyana
D/o. Jaya Seelan George & Mrs.Jeba Sheeba
06-07-2019

Ethan Joshua Durairaj
S/o. Mr.Joshua Durairaj & Mrs.Divya Joshua
10-07-2019

Nesika Chriselle Martin
D/o. Mr.Sathya Nesan Martin & Mrs.Sarika Sathya Nesan
22-07-2019

Laura Jane
D/o. Mr.Dinesh Xavier & Mrs.Anitha Florence
25-07-2019

Audrey Vincia
D/o. Mr.Divin Christopher & Mrs.Medlin Gracia
17-08-2019

# வேதவினா போட்டி - செப்டம்பர் 2019

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

### (எண்ணாகமம் 13-24 அதிகாரங்கள்)

கீழ்கண்ட வினாக்களுக்கு எண்ணாகமம் 13-24 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. நானே உன் பங்கும் உன் சுதந்திரமுமாய் இருக்கிறேன் என்று யாருடன் கர்த்தர் கூறினார்?
2. என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக என்று வேண்டினவர் யார்?
3. 14,700 பேர் வசனக்குறிப்பு எழுதுக.
4. “இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாய் இருக்கிறது” வசனக்குறிப்பு எழுதுக.
5. “எஸ்கோல்” சிறப்பு எழுதவும்.
6. ................ தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் .................. , ........................ எல்லா மனிதரையும் அவர்களுக்கு உண்டான சகல ........................... விழுங்கிப்போட்டது. நிரப்புக.
7. ஆரோன் எங்கே மரித்தார்?
8. “மகா நல்லதேசம்”, “இந்த கெட்ட இடம்” என்றவர்கள் யார்?
